# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
# (EXTERNAL DEGREE)
# PART – III EXAMINATION IN BBA – 2007 / 08

## EXB 402 ECONOMIC DEVELOPMENT AND PLANNING

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம்:-03 மணித்தியாலம்

---

01. a). அபிவிருத்திப் பொருளியல் எத்தன்மை வாய்ந்தது (Nature) என்பதனை சுருக்கமாக விளக்குக..

(04 புள்ளிகள்)

b). "1970 களில் பொருளாதார அபிவிருத்தி என்ற பதமானது புதிய பொருளாதார நோக்கில் மீள வரையறை செய்யப்பட்டது." அப்புதிய நோக்கினை விளக்குக.

(04 புள்ளிகள்)

c). அபிவிருத்தியின் மூன்று குறிக்கோள்களையும் விளக்குக.

(04 புள்ளிகள்)

d). அமார்த்தியா சென் என்பவரின் இயலுமை அணுகுமுறையினை (Capabilities approach) சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a). அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழ்க்கைத்தரம் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்குக.

(04 புள்ளிகள்)

b). "சனத்தொகை வளர்ச்சி உயர்வீதத்தில் காணப்படுவதும், தங்கியிருக்கும் சுமை அதிகமாகக் காணப்படுவதும் குறைவிருத்தி நாடுகளின் பொதுவான இயல்புகளில் சிலவாகும்." உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

c). விருத்தியடைந்து வரும் நாடுகள் பொருளாதார, சமூக, அரசியல் கட்டமைப்புக்களில், எவ்வாறு தமக்குள் வேறுபட்டு நிற்கின்றன?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. a). ஒரு லோரன்ஸ் வளையிக்கும், (Lorenz curve) கினி குணகத்திற்கும் (Gini Coefficient) இடையேயான தொடர்பினை ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

b). வறுமை வீதம் (Poverty rate) வறுமை இடைவெளி (Poverty gap) என்பனவற்றை வேறுபடுத்தி விளக்குக.

( 04 புள்ளிகள்)

c). வறுமைக்கும் சூழலுக்குமிடையேயான தொடர்பினை விளக்குக.

(04 புள்ளிகள்)

d). உலகளாவிய சுற்றுச் சூழல் பாதுகாப்புக்காக குறைவிருத்தி நாடுகள் எவ்விதம் செயலாற்ற முடியும்?

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. a). றொஸ்டோவின் பொருளாதார வளர்ச்சி மாதிரியில் இடம்பெறும் 'விடுபடுகட்டம்' என்ற நிலையின் பிரதான அம்சங்களை சுருக்கமாக சுட்டிக்காட்டுக.

( 05 புள்ளிகள்)

b). அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் குறித்து இவ்விடுபடுகட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

c). பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆர்தர் லூயிஸ் மாதிரியின் குறைபாடுகளை (Limitatom) விளக்குக.

(05 புள்ளிகள்)

d). சமவளர்ச்சி, சமனில் வளர்ச்சி இரண்டிற்கும் இடையேயான வேறுபாடுகளை நிரற்படுத்துக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளி)

05. a). அபிவிருத்திட்டமிடலின் தன்மையை (Nature) விளக்குக.

(04 புள்ளிகள்)

b). "அபிவிருத்திக்கான ஒரு திட்டமிடலை ஏற்றுக் கொள்வதானது, ஒரு குறிப்பிட்ட அளவு பொருளாதாரம் மற்றும் நிறுவனம் சார்ந்த அடிப்படை வாதங்களில் தங்கியுள்ளது." அத்தகைய வாதங்கள் எவை?

(08 புள்ளிகள்)

c). அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் திடடமிலானது தோல்விடைவதற்கான பிரதான காரணிகள் எவை?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளி)